# அர்ச்சாவதாரம்



திருக்கண்ணபுரம் சடகோபாச்சாரியார்
தொகுத்தது

# அர்ச்சாவதாரம்

தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே
தமருகந்தது எப்பேர் மற்றப்பேர் – தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே
அவ்வண்ணம் ஆழியானாம்

(முதல் திருவந்தாதி –44)

தன்னடியார்கள் உகந்த உருவமே தனக்கு உருவமாகவும், அவர்கள் எந்தப்பேரைக் கொண்டு அழைக்கிறார்களோ அதுவே தமது பேராகவும் அவனுடைய குணசேஷ்டிதங்களை எப்படி அடியார்கள் அனுபவிக் கிறார்களோ அப்படியே எம்பெருமான் ஸேவை ஸாதிக்கிறான்.

அவ்வாறே, எந்த திரவியத்தைக் கொண்டு தன் திருமேனி அமைக்கப் படுகிறதோ அதுவே தனக்கு அபிமதமாய் அந்தந்தத் திருமேனிகளில் எம்பெருமான் நித்யவாஸம் பண்ணுகிறான்.

இப்படி அமைந்த கோயில்களில் ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த திருத்தலங்கள் திவ்ய தேசங்கள் என்று சொல்லப் படுகின்றன. இப்படி அமைந்த 108 திவ்ய தேசங்களுடன் ஆழ்வார்கள் ஆசாரியர்கள் அவதரித்த திருத்தலங்களும் உகந்த நளின நிலங்கள் என்று கூறப்படுகின்றன.

எம்பெருமானின் ஐந்து நிலைகளில் பரத்வம் நித்ய ஸூரிகளுக்கும் முக்தர்களுக்குமே ஸேவிக்கக் கூடியது வ்யூஹமாகிற திருப்பாற்கடல் ப்ரம்மாதி தேவர்களுக்கே அணுகக்கூடியது. அந்தர்யாமித்வமோ யோகிகள் போன்றாருக்கே அறியக்கூடும்.

# அர்ச்சாவதாரம்

திருக்கண்ணபுரம் சடகோபாச்சாரியார்
தொகுத்தது

விலை

அட்டையில்

ஸ்ரீரங்கம் ஸ்ரீ ப்ரணவாகார விமானம் ஸ்ரீபரவாஸுதேவன்,
ஸ்ரீரங்கநாதர், திருமலையப்பன், ஸ்ரீ பேரருளாளன்,
ஸ்ரீ செல்வப்பிள்ளை, ஸ்ரீ மருவினியமைந்தனுடன்
உடையவர்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

# நம்மாழ்வாரின் அர்ச்சாவதார அனுபவம்

ஸ்ரீய: பதியான எம்பெருமானுக்கு இரண்டு முக்கியமான அடையாளங்கள் சொல்கிறோம். அவை அகில ஹேயப்ரத்யனிகத்வமும் அனந்த கல்யாண குணாகரத்வமும். அதாவது தாழ்ந்த குணங்கள் எதுவுமில்லாதவன். எல்லையற்ற கல்யாண குணங்களையுடையவன். 'நாராயண' என்ற திருநாமம் கல்யாண குணங்களைச் சொல்லுகிறது என்பது நம் ஆசார்யர்கள் தீர்வாகும். ஸ்ரீ பராசரபட்டரும் அஷ்ட ஶ்லோகியில் த்வய மந்திரத்தின் பதங்களின் பொருளைக் கூறுமிடத்தில் நாராயண பதத்திற்கு ஸமுசிதகுணஜாதம் என்று சொல்லுகிறார். எம்பெருமானார் சரணாகதிகத்யத்தில் பகவானின் கல்யாணகுணங்களை 'ஸ்வாபாவிக அனவதிக அதிசய ஜ்ஞான பல ஐஸ்வர்ய வீர்யசக்தி தேஜ ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்தவ ஆர்ஜவ ஸௌஹார்த்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதா முதலிய எண்ணற்ற குணக்கூட்டங்கள் என்று விவரிக்கிறார். இப்படிப்பட்ட எண்ணற்ற கல்யாண குணங்களையுடைய எம்பெருமான் ஐந்து நிலைகளில் இருந்துகொண்டு லோக ரக்ஷணத்தை நடத்துகிறார். அந்த நிலைகளாவன (1) பரமபதத்திலிருக்கும் பரத்வம் (2) திருப்பாற்கடலில் அனந்த சயனனாக இருக்கும் வ்யூஹ நிலை (3) தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவ்வப்பொழுது ராமக்ருஷ்ணாதி அவதாரங்களாக லீலாவிபூதியில் தம் லீலையை வெளிப்படுத்தும் விபவ நிலை (4) உபநிஷத்துக்களில் சொல்லுகிறபடி எல்லா சேதனா சேதனங்களினுள்ளும் இருந்து கொண்டு அவற்றின் செயல்பாடுகளை நியமிக்கும் அந்தர்யாமி நிலை (5) எல்லாக்காலத்திலும் பூமியிலுள்ளோர் கண்டு

ஸேவித்து கைங்கர்யம் செய்து பயன் பெறும்படியாக கோயில்களிலும் இல்லங்களிலும் எழுந்தருளியிருக்கும் அர்ச்சவதார நிலை. இந்த ஐந்து நிலைகளை விவரிக்குமிடத்தில் பிள்ளை லோகாசாரியர் தம் ஸ்ரீவசன பூஷணத்தில் 'பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம் ஆவரணஜலம் போலே பரத்வம் பாற்கடல் போலே வ்யூஹம் பெருக்காறுபோலே விபவங்கள் அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம் என்று விளக்குகிறார். நித்ய ஸூரிகளும் முக்தர்களும் மட்டுமே அனுபவிக்கும் நிலை பரத்வம். அங்கு எம்பெருமான் ஸாமகானத்தைக் கேட்டு கொண்டிருக்கிறார். அதனால் இதை பாட்டுக்கேட்கும் இடம் என்கிறார். ப்ரம்மாதிதேவர்கள் தங்கள் குறைகளை விண்ணப்பிக்கும் இடமாக திருப்பாற்கடல் உள்ளதால் இதை கூப்பீடுகேட்குமிடம் என்றும் அவதாரநிலையை குதித்த இடம் என்றும் அந்தர்யாமித்வத்தை வளைத்த இடம் என்றும் அர்ச்சாவதாரத்தை வகுத்தவிடம் என்றும் சொல்லுகிறார். ஆழ்வார்கள் பலவிடங்களிலே ப்ரபத்தி பண்ணியது அர்ச்சாவதாரத்திலே. ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதி குணங்கள் ப்ரகாசிப்பது அர்ச்சாவதாரத்திலே.

ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களால் திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரபெருமான்களின் குணங்களைப்பாடி ஸத்தை பெற்றார்கள். திருமங்கையாழ்வார் அர்ச்சாவதாரத்திலேயே மண்டியிருந்து எண்பதுக்கு மேற்பட்டட திவ்ய தேசங்களைப் பாடியிருக்கிறார். நம்மாழ்வார் முப்பது திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்துள்ளார். மற்றைய ஆழ்வார்களும் பல திவ்ய தேசங்களின் எம்பெருமான்களை பாசுரங்களால் அனுபவித்துள்ளார்கள்.

இவ்வாறு பாடப்பட்ட அர்ச்சாவதார எம்பெருமான்களிடம் எல்லா கல்யாணகுணங்களும் பூரணமாக இருந்தாலும் நம்மாழ்வார் அனுபவித்த திவ்ய தேசங்களை வரிசைபடுத்தி ஒரோர் எம்பெருமானிடத்தில் ஒரோர் குணம் முக்கியமாகப் பிரகாசிப்பதாக அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தம் ஆசார்யஹ்ருதயத்தில் காட்டுகிறார் .

இந்த விஷயத்தை எம்பெருமானின் ஐந்துநிலைகளை ஒரு ஸூத்திரத்தில் விவரித்து விட்டுப் பின்னர் ஆழ்வார் அனுபவித்தபடி எந்த திவ்யதேசத்தில் எந்த குணம் ப்ரதானமாக விளங்குகிறது என்று காட்டுகிறார். ஆழ்வார் அனுபவத்தை நாயனார் அனுபவித்த படி அதில் நாமும் பங்கு கொள்வோம்.

ஆசார்யஹ்ருதயம்

இப்படிப் பலவிடங்களிலும் தூதுவிட்டால் ப்ராப்யவஸ்த்வைக்யம் குலையாதோவென்கிற சங்கையிலே பரத்வாதிகளில் ஸ்தலபேத மொழிய வஸ்துவேதுமில்லை யென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச் செய்கிறார் என்று மணவாளமாமுனிகள் அவதாரிகை

ஸூ 157. பகலோலக்கமிருந்து கறுப்புடுத்துச் சோதித்துக் காரியம் மந்திரித்து வேட்டையாடி ஆராமங்களிலே விளையாடும் ராஜாநீதி ஆதுஞ்சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்தவென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு விண்மீதென்ற ஐந்திலும் காணலாம்.

நன்கு நாட்டைப் பரிபாலிக்கிற அரசன் செயல்களைச் சொல்லுகிறார் 'பகலோலக்கமிருந்து தொடங்கி ராஜ நீதி என்பது வரை. அதாவது பகலில் ராஜ ஸபையில் மந்திரி முதலியவர்கள் சூழ இருந்து மக்கள் குறைகளைத் தீர்த்து இரவில் மாறுவேடத்தில் ஸஞ்சாரம்செய்து நாட்டின் நிலையைத்தானே அறிந்துகொண்டு மந்திரிகளோடு செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி மந்திராலோசனை செய்து துஷ்ட மிருகங்களை வேட்டையாடி பின்னர் நந்தவனங்களில் ஓய்வெடுப்பதும் அரசர்கள் செயல் என்கிறார். எல்லா உலகங்களையும் ஆள்கின்ற எம்பெருமாள் தம் ஐந்து நிலைகளிலும் இதையே செய்வதாகக் காட்டுகிறார்.

இந்த ராஜநீதி ஆதும் சோராமே அதாவது இந்த ப்ரபஞ்ச பரிபாலனம் குறைவற நடத்திக் கொண்டு

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்

செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்
எங்கோல் வளையால் இடர் தீர்வராகாதே
(நாச்சியார் திருமொழி 14.3)

*செங்கோல் நடாவுகிற நீதி தவறாமல் உபய விபூதியிலும் ஏகதேசமும் சேஷியாதபடி தன்னுடைய திவ்யாஜ்ஞையை நடத்துமவனாய்*

சீரரசாண்டுதன் செங்கோல் சிலநாள் செலீஇக்கழிந்த
பாரரசொத்து மறைந்தது ஞாயிறு பாரளந்த பேரரசே
எம்விசும்பரசே எம்மை நீத்து வஞ்சித்த
ஓரரசே அருளாய். இருளாய் வந்து உறுகின்றதே
(திருவிருத்தம் 80).

*'பாரளந்த' என்று ஸௌலப்யத்தையும் 'விசும்பரசே' என்று பரத்வத்தையும் 'எம் ஓரரசே' என்று ப்ரணயித்வத்தையும் சொல்லுகிறபடி மூன்று முடிக்குரிய வானிளவரசான ஸர்வேஸ்வரனுக்கு*

விண்மீதிருப்பாய் மலைமேல்நிற்பாய் கடல் சேர்ப்பாய்
மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்
எண்மீதியன்ற புறவண்டத்தாய் எனதாவி
உள்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ
(திருவாய்மொழி 6.9.5)

वैकुण्ठे तु परे लोके श्रिया सार्धं जगत्पतिः
आस्ते विष्णुरधिन्त्यात्मा भक्तैर्भागवतैस्सह

*என்று வைகுண்டத்தில் பெரிய பிராட்டியோரோடும் பக்தர்களும் பாகவதர்களும் உடனிருக்க லோகபதியான எண்ணங்களுக்கப்பாற் பட்ட தன்மையுடைய விஷ்ணு இருக்கிறார் என்று சொல்கிறபடியே எப்போதும் பகலாக உள்ள பரமபதத்தை*

'பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில்
மிகக் கண்டேன் மீண்டு அவனைமெய்யே மிகக் கண்டேன்

ஊன்திகழும்மேனி ஒளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு (2ம் திருவந்தாதி 81)

*என்றும் சொல்லுகிறபடியே*

கண்ட கேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச்சிற்றின்பம்
ஒண்டொடியாள்திருமகளும் நீயுமே நிலாநிற்ப
கண்டசதிர்கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே
(திருவாய்மொழி 4.9.10)

*என்றபடி ஸாம்ஸாரிக ஸுகத்தையும் கைவல்யத்தையும் கடந்து பரமபதத்தில் பெரியபிராட்டியாரோடு வீற்றிருக்கும் நிலையை கண்டேன் என்று பரத்வத்தையும் இவற்றுளெங்கும் மறைந்துறை வாய் என்பது*

यस्यात्माशरीरं य आत्मानमन्तरो यमात्मा न वेद (बृ.उ.)

*என்று சொல்லுகிறபடியே ஸகல சேதனாசேதனங்களுள்ளும் அந்தர்யாமியாக இருந்து கொண்டு*

உள்ளத்தேயுறையும் மாலை உள்ளுவானுணர்வொன்றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய் தொண்டுக்கே கோலம்
பூண்டு
உள்ளுவாறுள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதியென்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான் விலவறச்சிரித்திட்டேனே
(திருமாலை 34)

*என்று அந்தர்யாமித்வத்தையும்*

*'கடல் சேர்ப்பாய்' என்று பாற்கடலிலேயோகநித்திரை செய்து சேதனர்களை ரக்ஷிக்கும் உபாயங்களை சிந்திக்கும் வ்யூஹத்தையும் மண்மீதுழல்வாய் என்று ரக்ஷணார்த்தமாக அவதரித்து*

நாட்டைப் படையென்று அயன் முதலாத்தந்தருளிர்
மாம லருந்தி
வீட்டைப்பண்ணிவிளையாடும் விமலன்தன்னைக் கண்டீரே

காட்டை நாடித்தேனுகனும் களிறும் புள்ளும் உடன் மடிய
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தே கண்டோமே
(நாச்சியார் திருமொழி 14.9)

என்கிறபடியே ஆச்ரிதவிரோதிகளை நிரஸிக்க வேட்டையாடுகையும் மலைமேல் நிற்பாய் என்று விரோதிகளை அழித்த சிரமம் தீர மிகவும் ஸுகுகர (ஆராமம் சூழ்ந்த அரங்கம் (சிறியதிருமடல்) திருமலை முதலிய திவ்ய தேசங்களிலே நித்ய வாஸம் பண்ணுகையுமாகிய இவ்வைந்தையும் ஆழ்வார் ஒரு பாசுரத்தில் காட்டுகிறார்.

ஸூ 158

இவ்வைந்திலும் ஸ்வரூபரூப குணங்கள் ஒத்திருந்தும் ஆழ்வார் அர்ச்சவதாரத்தில் ஈடுபடுவது ஏன் என்ற ஸந்தேகத்திற்கு விடையாக அர்ச்சாவதாரத்தின் குண பூர்த்தியை மேலே சொல்லுகிறார்.

தமருகந்த அடியோமுக்கேயென்னும்
பின்னானார்வணங்குமிடத்திலேயெல்லாம் பூரணம்–
தருகந்தது எவ்வுருவம் அவ்வுருவந்தானே
தமருகந்ததெப்பேர் மற்றப்பேர் தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே
அவ்வண்ணமாழியானாம்

(முதல் திருவந்தாதி 44)

என்கிறபடியே பக்தர்கள் உகந்தத்ரவ்யங்களே தமக்குத் திருமேனியாகவும் அவர்களுகந்ததிருநாமங்களே தமக்குத் திருநாமங்களாகவும் கொண்டு

தீ எம்பெருமான் நீர் எம்பெருமான் திசையும் இருநிலனு
மாய் எம்பெருமானாகி நின்றால் அடியோம் காணோமால்
தாயெம்பெருமான் தந்தை தந்தையாவீர் அடியோமுக்
கேயம்பெருமானல்லீரோ நீர் இந்தளூரிரே
(பெரிய திருமொழி 4.9.5)

*என்கிறபடியே பரத்வ வ்யூஹங்கள் லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருப்பதால் நாம் அணுகமுடியாமலிருப்பதாலும் விபவங்கள் அந்தந்த அவதாரகாலங்களில் இருந்தவர்களுக்கு மட்டுமே ஸேவிக்க முடிந்ததாலும் அந்தர்யாமி யோகிகளுக்கே கிட்டக் கூடியதாலும் திருவிந்தளூர் போன்ற திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் அரச்சவதாரம்தான் அடியோமுக்கு ருசிபிறந்தபோதே நினைத்தபடி அனுபவிக்க முடிந்த இடம் என்பதாலும்*

பொன்னானாய் பொழிலே ழும்காவல் பூண்ட
புகழானாய் இகழ்வாயதொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்னலல்லால்
என்னறிவன் ஏழையேன் உலகமேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபாலானாய்
குணபாலமதயானாய் இமையோர்க்கு என்றும்
முன்னானாய் பின்னானார் வணங்கும் சோதி
*திருமூழிக்களத்தானாய் முதலானாயே*

(திருநெடுந்தாண்டகம் 10)

*என்று அவதாரங்களுக்குப் பிற்பட்டவர்களும் அனுபவிக்கும்படி திருமூழிக்களம் போன்ற திவ்ய தேசங்களில் உள்ள எம்பெருமான் களிடம் எல்லாம் பூர்ணமாகையால் ஆழ்வார்கள் இதில் மண்டினார்கள்.*

*இப்படி அரச்சாவதாரத்தில் எல்லா கல்யாண குணங்களும் பூர்ணமானால் எ'லலா குணங்களும் எல்லா திவ்யதேசங்களிலும் பிரகாசிக்குமோ என்ற கேள்விக்கு இந்த ஆழ்வார் அனுபவித்த திவ்ய தேசங்களிலே ஒவ்வொரு இடத்திலும் பிரதானமாக ஒரு குணம் பிரகாசிக்கும் என்று சொல்லி திவ்ய தேசங்களில் பிரதானமான கோயிலி'ல பிரகாசிக்கிற குணத்தை முதலில் அருளிச்செய்கிறார்.*

*ஸூ 159*

வன்பெருவானகமுய்யமுதலுய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி வடிவுடைக் கடலிடம்

கட்கிலீபெயன்னுமவற்றில் இவள் திறத்தென்கொலோ
என்பிக்கிற *வ்யூஹஸௌஹார்த்தப்ரதானம்*
வன்பெருவானகமுய்ய அமரருய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய
துன்பமிகுதுயரகல அயர்வொன்றில்லாச்
சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென்திசை நோக்கிப்பள்ளிகொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து அடியார்தங்கள்
இன்பமிகுபெருங்குழுவுகண்டு யானும்
*இசைந்து உடனே இருக்கும்நாள் என்றுகொலோ*

(பெருமாள் திருமொழி 1.10)

*முதலில் ப்ரம்மலோகத்தில் எழுந்தருளி பின்பு பூலோகத்திற்கு வந்து நைமித்திகப்ரளயத்தில் அழியாத ப்ரம்மலோகம் முதல் இந்தலோகம் வரை எல்லாரும் உஜ்ஜீவிக்கும்படியாக*

திருவாளன் திருப்பதி
திருவாளன் இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற
செருவாளும் புள்ளாளன் மண்ணாளன்
செருச்செய்யும் நாந்தகமென்னும்
ஒருவாளன் மறையாளன் ஓடாத
படையாளன் விழுக்கையாளன்
இரவாளன் பகலாளன் என்னையாளன்
ஏழுலகப்பெரும்புரவாளன்
திருவாளன் இனிதாகத்திருக்கண்கள்
வளர்கின்ற திருவரங்கமே

(பெரியாழ்வார் திருமொழி 4.9.10)

*என்றும்*

பருவரங்களவைபற்றி படையாலித்தெழுந்தானை
செருவரங்கப்பொருதழித்த திருவாளன் திருப்பதி மேல்
திருவரங்கத்தமிழ்மாலை விட்டு சித்தன் விரித்தனகொண்டு
இருவரங்கமெரித்தானை ஏத்தவல்லாரடியோமே

(பெரியழ்வார் திருமொழி 4.8.10)

*என்றும்*

வடிவுடை
முடிவுஇவள்தனக்கு ஒன்றறிகிலேனென்னும்
மூவுலகாளியே என்னும்
கடிகமழ்கொன்றைச்சடையனே என்னும்
நான்முகக் கடவுளே என்னும்
வடிவுடைவானோர் தலைவனேஎன்னும்
வண்திருவரங்கனே என்னும்
அடியடையாதாள்போல் இவளணுகி
அடைந்தனள் முகில்வண்ணனடியே

(திருவாய்மொழி 7.2.10)

*என்றும்*

*வ்யூகரூபமாக பாற்கடலில் கிடந்ததை*

கடலிடங்கொண்ட கடல் வண்ணா என்னும்
பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய்
பற்றிலார்பற்ற நின்றானே
காலசக்கரத்தாய் கடலிடங்கொண்ட
கடல் வண்ணா கண்ணனே என்னும்
சேல்கொள் தண் புனல்சூழ் திருவரங்கத்தாய்
என்னும் என் தீர்த்தனே என்னும்
கோலமாமழைக்கண் பனிமல்க இருக்கும்
என்னுடைக் கோமளக்கொழுந்தே

(திருவாய் பொழி 72.7)

*என்றும்*

கட்கிலீகாகுத்தா
வட்கிலளிறையும் மணிவண்ணா என்னும்
வானமே நோக்கும் மையாக்கும்
உட்குடைய சுரருயிரெல்லாமுண்ட
ஒருவனே என்னும் உள்ளுருகும்
கட்கிலீ உன்னைக் காணுமாறருளாய்

காகுத்தா கண்ணனே என்னும்
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்
இவள் திறத்தென் செய்திட்டாயே

(திருவாய்மொழி 7.2.3)

*என்றும் பரத்வம் முதலிய ஐந்து நிலைகளையும் காட்டி இவள் திறத்தென்கொலோ என்பிக்கிற*

இட்டகாலிட்ட கையளாயிருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும்
கட்டமே காதலெனமூர்ச்சிக்கும்
கடல் வண்ணா கடியை காணென்னும்
வட்டவாய் நேமிவலங்கையாவென்னும்
வந்திடாயென்றென்றே மயங்கும்
சிட்டனே செழுநீர் திருவரங்கத்தாய்
இவள் திறத்தென் சிந்தித்தாயே

(திருவாய் மொழி 7.2.4)

*என்றும்*

என்செய்கின்றாய் என்தாமரைக்கண்ணா
என்னும் கண்ணிர் மல்க இருக்கும்
என்செய்கேன் எறிநீர்த்திருவரங்கத்தால்
என்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்
முன்செய்த வினையே முகப்படாயென்னும்
முகில் வண்ணா தகுவதோ என்னும்
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்
என்கொலோ முடிகின்றதிவட்கே

(திருவாய்மொழி 7.2.2)

*என்றும் தாயார் தன் மகளின் நிலையை எம்பெருமானுக்குச் சொல்லி இவள் ஸாதனானுஷ்டானம் செய்கிறாளோ என்று அஞ்சி இவளை எம்பெருமான் உடனே கைக்கொள்ளாவிடில் முடிந்து போகும் நிலையிலிருக்கின்றாளே என்று முறையிடுகின்ற கங்குலும் பகலும் திருவாய்மொழியில் கூப்பீடு கேட்கும் நிலைய்யைக் காட்டுவதால் வ்யூஹ நிலையைச் சொல்லுகிறார் ஆழ்வார்.*

உய்த்துபோந்து என்னுலப்பிலாத வெந்தீவினைகளை நாசம்
செய்து உனது
அந்தமிலடிமை அடைந்தேன் விடுவேனோ
ஐந்து பைந்தலையாடரவணைமேவிப்பாற்கடல் யோக
நித்திரை
சிந்தைசெய்த எந்தாய் உன்னைச் சிந்தை செய்து செய்தே
(திருவாய்மொழி 2.6.5)

*என்று பாற்கடலில் நித்திரை செய்வதுபோல் எல்லா ஆத்மாக்களுக்கும் இன்னார் இனியார் என்று பாராமல் நன்மையையே சிந்திக்கும் வ்யூஹ ஸௌஹார்தம் முக்கியமாக இந்தத் தலத்திலே பிரகாசிக்கிறது. (ஸௌஹார்த்தம் – நன்மையே எண்ணும் மனமுடைமை)*

**ஸூ 160**

மண்ணோர் விண்ணோர்வைப்பில் போகின்ற
ஏழுலகுக்குயிர் பாசம்வைத்தநிகரில் வாத்ஸல்யம் உஜ்வலம்

*நம்மாழ்வார் அனுபவித்த திவ்ய தேசங்களில் திருவேங்கடத்திற்கும் திருமாலிருஞ்சோலை மலைக்கும் மட்டும் இரண்டு இரண்டு திருவாய்மொழிகள் அருளிச் செய்திருக்கிறார். தெற்குத் திருமலை என்று சொல்லப்படும் திருமாலிருஞ்சோலைக்கு 2ம் பத்து 10ந்திருவாய்மொழியும் 10ம் பத்து 7ம் திருவாய்மொழியும் அருளிச்செய்திருக்கிறார். வடவேங்கடத்திற்கு 3ம் பத்து 3ம் திருவாய் மொழியும் 6ம் பத்து பத்தாம் திருவாய்மொழியுமாக அமைந்திருக்கின்றன. வடவேங்கடத்தை பாடும் இரண்டு திருவாய்மொழிகளையும் முதலில் எடுத்துக்கொண்டு திருமாலிருஞ்சோலையை 10ம் பத்து பதிகத்தோடு சேர்த்து நாயனார் அனுபவிக்கிறார்.*

*வடவேங்கடத்தில் மண்ணோர்களும் விண்ணோர்களும் வந்து எம்பெருமானை அடிபணிகிறார்கள் என்று ஆழ்வார்கள் காட்டுகிறார்கள்.*

கண்ணாவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட
விண்ணோர்வெற்பனே

(திருவாய்மொழி (1.8.3)

*திருப்பாணாழ்வாரும் அமலனாதிபிரானில் இதே கருத்தை வெளியிடுகிறார்.*

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல்நிறத்தாடையும் அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில்
உந்திமேலதன்றோ அடியேன் உள்ளத்தின்னுயிரே
(அமலனாதிபிரான் 3)
புரிந்து மலரிட்டு புண்டரீகபாதம்
பரிந்து படுகாடு நிற்ப தெரிந்தெங்கும்
தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு

(நான்முகன் திருவந்தாதி 48)

*என்று உபயவிபூதியிலுள்ளவர்க்கும் சேமித்து வைத்த நிதி போல இருக்கும் திருமலை*

போகின்ற காலங்கள் போய காலங்கள் போகு காலங்கள் தாய் தந்தை
யுயிராகின்றாய் உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும் நாதனே பரமா தண்வேங்கடம்
மேகின்றாய் தண்துழாய் விரைநாறுகண்ணியனே

(திருவாய்மொழி 2.6.10)

*என்றும் ஏழுலகுக்குயிர்*

கண்ணாய் ஏழுலகுக்கு உயிராய் எங்கார் வண்ணனை
விண்ணோர் தாம் பரவும் பொழில் வெங்கடவேதியனை

திண்ணார் மாடங்கள் சூழ் திருமங்கையர்கோன் கலியன்
பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்கு இல்லை பாவங்களே
(பெரியதிருமொழி 1-9-10)

*என்றும் சொல்லுகிறபடியே எல்லாக்காலத்திலும் எல்லா உயிர்களுக்கும் ஸர்வவிதபந்துவாகவும் எல்லார்க்கும் அந்தராத்மா வாகவும் இருப்பவன்*

ஈசன் வானவர்க்கென்பன் என்றால் அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு
நீசனேன்நிறைவொன்றுமிலேன் என் கண்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே
(திருவாய்மொழி 3-3-4)

*நித்யஸூரிகளுக்கு நாயகன் என்றால் திருவேங்கடவனுக்கு ஒரு பெருமையோ எந்த தகுதியுமில்லாத என்னிடம் பாசம் வைத்ததன்றோ அவன் வாத்ஸல்யத்தைக்காட்டுகிறது.*

அகலகில்வேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா
நிகரில் புகழாய் உலகமூன்றுடையாய் என்னையாள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்
கடத்தானே
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து
புகுந்தேனே
(திருவாய்மொழி 6-10-10)

அகலகில்லேன் – மார்பா = ஸ்ரீமத்
நிகரில் திருவேங்கடத்தானே – நாராயண
உன்னடி = சரணௌ
கீழ் அமர்ந்து புகுந்தேனே - ஶரணம் ப்ரபத்யே
புகலொன்றில்லா அடியேன் - ஆகிஞ்சன்யமும் அனன்ய
கதியுமுடையநான்

*என்றுத்வயத்தின் முதல் வாக்கியத்தைச் சொல்லுகிறது.*

குன்றின் மேலுள்ள விளக்குப்போல் ப்ரகாசிக்கிறது. ஆக ஒழிவில் காலம், உலகமுண்ட பெருவாயா என்று தொடங்கும் இரண்டு திருவாய்மொழிகளையும் சேர்த்து த்வயார்த்தம் சொல்லப்பட்டது.

இதற்குப்பின்னர் திருவாய்மொழியில் வரும் திவ்யதேச வரிசையிலேயே அங்கங்கே பிரகாசிக்கும் குணங்களை காட்டுகிறார்.

*(திருக்குருகூர் 4-10)*

*161.* உபயப்ரதானப்ரணவமான உறைகோயிலில் எத்தேவுமென்னும் பரேசத்வம் பொலியும்

**ओमित्यात्मानं युञ्जीत** ஓமென்று ஆத்மாவை த்யானி என்றும் **ओंकारो भगवान् विष्णुः** என்று சுருதிகளில் சொல்வது போல சொற்களின் பொருளால் ஜீவாத்மா பரமாத்மா இருவருக்கும் வாசகமாய் இருவருக்கும் முக்கியத்வம் தோற்றுவிக்கிற ப்ரணவம் போலே திருக்குருகூரில் ஆழ்வாருடையவும் பொலிந்து நின்ற பிரானுடையவும் ஆஜ்ஞை நடக்கிறபடியால் இருவரையும் ப்ரதானமாகக் கொண்ட உறைகோயில்

நாடிநீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்
வீடில் சீர்ப்புகழாதிப்பிரான் அவன் மேவியுறை கோவில்
மாடமாளிகை சூழ்ந்தழகாயதிருக்குருகூரதனை
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர் பரந்தே

(திருவாய்மொழி 4-10-2)

ஆதிநாதப் பெருமான் என்னும் பெயர் இந்த எம்பிரானுக்கு ஒன்றும்தேவும் உலகுமுயிரும் யாதுமில்லா அன்று என்று முதல் பாசுரத்தில் சொல்லுகிறபடி முதலில் இருந்ததால் ஏற்பட்டது.
**सदेव सोम्य इदमग्र आसीदेकमेवाद्वितीयम्** சாந்தோக்ய உபநிஷத் வாக்யத்தை அனுசரித்து இந்தப் பாடல் அமைந்திருக்கிறது

எத்தேவும் உறுவதாவது எத்தேவும் எவ்வுலகங்களும் மற்றும் தன்பால்
மறுவில்மூர்த்தியோடொத்து இத்தனையும் நின்றவண்ணம் நிற்கவே

செறுவில் செந்நெல் கரும்போடோங்கு திருக்குருகூரதனுள்
குறியமாணுருவாகியநீள் குடக்கூத்தனுக்காட்செய்வதே

(திருவாய்மொழி 4-10-10)

எல்லாத்தேவதைகளும் ஸகல சேதனாசேதனங்களும் தன் ஸ்வரூபத்தோடு சேர்ந்து அதை சரீரமாகக் கொண்டவன் வாமனனாகவும் குடக்கூத்தாடிய கண்ணனாகவும் இருந்து எல்லோரையும் வசீகரித்தவனே திருக்குருகூரில் நித்யவாஸமாக யிருக்கிறான். அவனுக்கு ஆட்செய்வதே ஸ்வரூபம். மேல் சொன்ன இருபாசுரங்களும் சொல்லுகின்ற பரத்வம் பிரகாசிக்கிறது. பொலிந்து நின்ற பிரானின் குணமானதால் பொலியும் என்ற பதம் உபயோகிக்கிறார்.

**திருக்குறுங்குடி (5.5)**

ஸூ 162 வைஷ்ணவ வாமனத்தில் நிறைந்த நீலமேனியின்
ருசிஜனகவிபவ லாவண்யம் பூர்ணம்

வாமனாவதாரத்தில் தன்னுடைமையைப் பெறுவதற்கு மஹாபலியிடம் தான் யாசகனாகப் போனது போல பாஷ்யகாரரிடம் வேதார்த்தம் கேட்டு சிஷ்யனானதால் ஸ்ரீ வைஷ்ணவ நம்பி என்று திருநாமமாக திருக்குறுங்குடியில் நித்யவாஸம் செய்யும் எம்பிரானை வைஷ்ணவ வாமனனென்று சொல்லுகிறார். மேலும்

அறிவரியபிரானை ஆழியங்கையனையே அலற்றி
நறிய நல்மலர்நாடி நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன
குறிகொள் ஆயிரத்துள் இவை பத்தும் திருக்குறுங்குடியதன் மேல்
அறியக் கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே

(திருவாய்மொழி 5-5-11)

என்று சொல்லுகிறபடியே இத்திருவாய்மொழியை அறிந்தவர் வைஷ்ணவர் என்று ஆழ்வார் சொல்லுவதால் வைஷ்ணவ என்ற பதம் உபயோகிக்கிறார் என்றும் கொள்ளலாம்.

எம்பெருமானார் தினந்தோறும் ஸ்நானம் முடிந்து திருமண் காப்பு சாத்திக் கொள்ளும் போது அருகில் வடுகநம்பி என்னும் சிஷ்யர்

திருமண் குழைத்துக் கொண்டு அருகில் நிற்பார். ஒரு ஸமயம் திருக்குறுங்குடியில் இருக்கும்போது திருமண் இட்டுக்கொள்ள 'வடுகநம்பி அருகில்லாததால் திருக்குறுங்குடிநம்பியே வந்து திருமண் குழைத்துக்கொண்டு அடியேன் வைஷ்ணவன்' என்று சொன்னார்.

வாமனாவதாரத்தை எடுப்பதற்கு ப்ரயோஜனம் விபவலாவண்யம் பூர்ணம் என்று வாமனாவதாரத்தில் மஹாபலியின் யாக சாலையில் நுழையும்போது மஹாபலியும் அவன் பத்னியும் அவர் அழகைக் கண்டு மோகித்தார்கள் என்று புராணம் சொல்லுவதையொட்டியது குறுங்குடி என்ற திவ்ய தேசத்தின் பெயரை ஒட்டி சிறிய உருவமான வாமனாவதாரத்தைச் சொன்னதாகவும் அமையும்

நிறைந்த
நிறைந்தவன்பழிநங்குடிக்கு இவளென்று அன்னை
காணகொடாள்
சிறந்த கீர்த்தி திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
நிறைந்த சோதிவெள்ளம் சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும்
நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான் நேமியங்கையுளதே

(திருவாய்மொழி 5-5-7)

நீலமேனி
மேலும் வன்பழிநங்குடிக்கு இவளென்று அன்னை காண
கொடாள்
சோலைசூழ் தண்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக் கண்ணும் கனிவாயும்
நீலமேனியும் நான்கு தோளும் என்நெஞ்சம் நிறைந்தனவே

(திருவாய்மொழி 5-5-6)

நீலமேனி என்று ஸூத்ரத்தில் எடுத்தது இத்திருவாய்மொழியில் ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமான் திருமேனி அழகை சொல்லும் எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். அதனால் இங்கு லாவண்யம் பிரகாசிக்கிறது. இந்த லாவண்யத்திலேயே ஆழ்வார் ஆழ்ந்துபோனதால் ருசிஜனக என்று சொல்கிறார்.

**வானமாமலை (5-7)**

**ஸூ 163**

ருசிவிவசர்க்குப்பாதமே சரணாக்குமௌதார்யம்
வானமாமலையிலே கொழுந்துவிடும்.

*திருக்குறுங்குடி எம்பெருமானுடைய லாவண்யத்தின் ருசியால் தன் வசமிழந்த ஆழ்வாருக்கு தன் திருவடிகளையே கதியாகக் காட்டித்தருகிறார். வானமாமலை எம்பெருமான்.*

ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய் உனக்கு
ஓர் கைம்
மாறு நானொன்றிலேன் எனதாவியும் உனதே
சேறு கொள் கரும்பும் பெருஞ்செந்நெலும் மலிதண்சிரீ
வரமங்கை
நாறுபூந்தண்துழாய் முடியாய் தெய்வநாயகனே

(திருவாய்மொழி 5-7-10)

*உன் திருவடிகளையே எனக்கு உபாயமாக தந்தாய். கரும்பும் செந்நெல்லும் நிறைந்த வயல்களுடைய சிரீவரமங்கலநகரில் வீற்றிருக்கும் தெய்வநாயகனே என்றும் அதற்கு பிரதியாகத் தன்னிடம் ஒன்றுமில்லை என்றும் சொல்லுகிறார்.*

ஔதார்யம்
கருளப்புட்கொடிசக்கரப்படைவானநாட என் கார்முகில்
வண்ணா
பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்
தெருள்கொள்நான்மறை வாணர் பலர் வாழ் சிரீவரமங்கல
நகர்க்கு
அருள்செய்து அங்கிருந்தாய் அறியேன் ஒரு கைம்மாறே

(திருவாய்மொழி 5-7-3)

*கார்முகில் வண்ணா என்பதால் எல்லாருக்கும் மழை பொழியும் தன்மையான ஔதார்யம் காட்டப்படுகிறது. வண்ணம் என்பதற்கு நிறம் என்றும் 'போன்ற' என்றும் பொருள் உள்ளதால் இரண்டு விதமாகவும் பொருந்துகிறது.*

ஏளமாய் நிலங்கீண்ட என்னப்பனே கண்ணா என்றும்
  என்னையாளுடை
வானநாயகனே மணிமாணிக்கச்சுடரே
தேனமாம்பொழில் தண்சிரீவரமங்கலத்தவர்கைதொழவுறை
வானமாமலையே அடியேன் தொழவந்தருளே

(திருவாய்மொழி 5-7-6)

வந்தருளி என்னெஞ்சிடங்கொண்ட வானவர்கொழுந்தே
  உலகுக்கோர்
முந்தைத்தாய் தந்தையே முழுவேழுலகுமுண்டாய்
செந்தொழிலவர்வேதவேள்வியறா சிரீவரமங்கலநகர்
அந்தமில் புகழாய் அடியேனை அகற்றேலே

(திருவாய்மொழி 5-7-7)

*வானவர் கொழுந்தே என்பதைக் கருத்தில் கொண்டு செடியில் கொழுந்து வளர்ச்சிக்கு ஆரம்பமாக உள்ளதால் ஔதார்யம் மேலும் வளரும் என்று காட்ட கொழுந்து விடும் என்று சொல்கிறார்.*

**திருக்குடந்தை 5-8**

**ஸூ 164**

களைகணற்றாரை உருக்கும் மாதுர்யம்
குடமூக்கிலே ப்ரவஹிக்கும்

களை கணற்றார்
களைவாய் துன்பம் களையா தொழிவாய்களைகண் மற்றிலேன்
வளைவாய்நேமிப் படையாய் குடந்தைக்கிடந்த மாமாயா
தளராவுடலம் எனதாவி சரிந்துபோம்போது
இளையாதுனதாள் ஒருங்கப்பிடித்துப்போத இசை நீயே

(திருவாய்மொழி 5-8-8)

*என்னுடைய துக்கத்தைப் போக்குவார் வேறு யாருமில்லை. நீ செய்தாலும் செய்யாவிட்டாலும் வேறு கதியில்லை என்ற அனன்ய கதித்வத்தை உடையவருக்கு*

ஆராவமுதே அடியேனுடலம் நின்பால் அன்பாயே
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே
சீரார்செந்நெல் கவரிவீசும் செழுநீர் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன் எம்மானே

(திருவாய்மொழி 5-8-7)

*என்று அனுபவத்தில் தளர்ந்து போம்படி பண்ணுகிற ஆராவமுதான எவ்வளவு அனுபவித்தாலும் முடிவற்ற இனிமை - மாதூர்யம் குடமுக்கிலே - திருக்குடந்தையிலே ப்ரவஹிக்கும் - பெருகும்*

**திருவாய்மொழி 5-9**

**ஸூ 165**

மெலிவிலும் சேமங்கொள்விக்கும் க்ருபை தென்னகரிலே நித்யம்

*முன்பு சொன்ன எல்லையற்ற ஆனந்தத்தைத்தரும் பகவதனுபவம் கிடைக்காமையால் உடல் மெலிந்து*

மானேய் நோக்குநல்லீர் வைகலும் வினையேன் மெலிய
வானார் வண்கமுகும் மது மல்லிகை கமழும்.
தேனார் சோலைகள் சூழ் திருவல்லவாழுறையும்
கோனாரை அடியேன் அடிகூடுவது என்று கொலோ

(திருவாய்மொழி 5-9-1)

க்ருபை

கழல்வளை பூரிப்பயாம் கண்டு கைதொழக்கூடுங்கொலோ
குழலுமென்ன யாழுமென்னக் குளிர் சோலையுள் தேனருந்தி
மழலை வரிவண்டுகளிசைபாடும் திருவல்லவாழ்
சுழலின் மலிசக்கரப்பெருமானது தொல்லருளே

(திருவாய்மொழி 5-9-7)

*சுழல்கின்ற திருச்சக்கரத்தைக் கையிலேந்திய எம்பெருமானது தொல்லருளே - க்ருபையே சேமங்கொள்விக்கும் தென்னகரிலே நித்யம்.*

ரக்ஷணத்தைச் செய்வதையே ஸ்வபாவமாக உடையவன். ரக்ஷணமாவது அனிஷ்ட நிவ்ருத்தியும் (விரோதி போகுதலும்) இஷ்டப்ராப்தியும் இஷ்டப்பராப்தியாவது எம்பெருமானைக் கண்டு கைதொழுதல், விரோதியைப் போக்க எப்பொழுதும் சக்கரத்தை தரித்திருக்கிறான்.

நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல்
சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் தெரிந்துரைத்த
நாமங்களாயிரத்துள் இவை பத்தும் திருவல்லவாழ்
சேமங்கொள் தென்னகர்மேல் செப்புவார் சிறந்தார் பிறந்தே
(திருவாய்மொழி 5-9-11)

**திருவண்வண்டூர் (6-1)**

**ஸூ 166**

வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷணஸ்தைர்யம் பம்போத்தரதேசஸ்தம்
வ்யவஸாயஜ்ஞர் - தன்மையை அறிந்தவர்.

ஸீதாப்பிராட்டி ராமனின் தன்மையை அறிந்தவர். இதற்கு நிரூபணம் ராமாயணத்தில் காணலாம். சீதை அசோகவனத்தில் சிறையிருக்க இராவணன் அங்கு வந்து அவளைப் பலவிதமாக நிர்ப்பந்திக்க ஸீதை அவனுக்கு ராமனைச் சரணமடையும்படி உபதேசிக்கிறாள்.

तेन मैत्री भवातु ते यदि जीवितुं इच्छसि
प्रसादयस्व त्वं चैनं शरणागतवत्सलम्

(रा सु 20.21)

நீ உயிர் வாழ விரும்பினால் அவரோடு உனக்கு நட்பு உண்டாகட்டும். சரணமடைந்தவர்களிடத்தில் வாத்ஸல்யமுடைய அவரை மகிழ்வி என்று சொல்கிறாள். பின்னர் இராமன் வானரசேனையோடு ஸமுத்திரக் கரையை அடைந்தபோது விபீஷணன் ராமனிடம் சரணமடைய வருகிறான். அப்பொழுது பெருமாள் मित्र भावेन सम्प्राप्तं न त्यजेयं कथञ्चन நட்புமுறையாக வருபவனை ஒருகாலும் கைவிட மாட்டேன் என்றும்

सकृदेव प्रपन्नायतवास्मीति च याचते
अभयं स्र्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम (रा.यु.)

ஒரு தடவையே நான் உன்னுடையவன் என்று வேண்டி சரணமடைந்தவனுக்கு அவன் யாராயிருந்தாலும் நான் அபயம் அளிப்பேன் இது என் வ்ரதம் என்று சொல்கிறார். இதைத்தான் रामस्य व्यवासायज्ञा ராமனின் தன்மையை அறிந்தவள் என்று சொல்கிறார். அவருடைய ரக்ஷணமாகிற குணத்தை நினைவூட்டச் சொல்லி பக்ஷி வண்டுகளைத் தூதுவிடுத்தது இராமாவதாரத்தைக் குறித்துத் தூதுவிடும் ஆழ்வார் சொல்கிறார்.

வேறுகொண்டு உம்மை யானிரந்தேன் வெறிவண்டினங்காள்
தேனுநீர்ப்பம்பை வடபாலைத்திருவண்வண்டூர்
மாறில் போரரக்கன் மதிள் நீறெழச்செற்றுகந்த
ஏறுசேவகனார்க்கு என்னையும் உளளென்மின்களே

(திருவாய்மொழி 6-1-10)

இராவணனையும் இலங்கையும் அழித்தவரிடம் அவனுடைய ரக்ஷணத்தை எதிர்நோக்கியிருப்பவர்களில் தானும் ஒருத்தர் என்று நினைவுபடுத்தச் சொல்கிறார்.

பம்பை வடபாலைத்திருவண்வண்டூர் என்ற பாசுர அடியைக் கொண்டு பம்போத்தரதேசம் என்று நாயனார் காட்டுகிறார். ஆக ரக்ஷணத்தில் உறுதியாகிற ஸ்தைர்யம் என்ற குணம் திருவண்டூரிலே நித்யமாக இருக்கும் என்கிறார்.

**திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்)(6.3)**

**ஸூ 167**

விளம்ப விரோதமழிக்கும் விருத்தகடனா ஸாமர்த்யம் நன்னகரிலே விஸ்தீர்ணம்.

முந்தின திருவாய்மொழியான மின்னிடை மடவார் பதிகத்தால் நாயகன் விளம்பமாக (தாமதித்து) வந்ததால் அவனிடம் கோபத்தை (விரோதத்தை)க் காட்டும் ஆழ்வார் நாயகி போகுநம்பி என்றும் கழகமேறேல் நம்பி என்றும் சொல்கிறார். அந்தக் கோபத்தை உன்

திருவடியால் எங்கள் சிற்றிலை அழித்து முறுவல் செய்து நின்று போக்கினாய் என்று சொல்கிறார். இங்கு ஒன்றுக்கொன்று விரோதமானவற்றை ஒருசேரக்காட்டும் ஸாமர்த்யத்தை காட்டுகிறாய். தன் விபூதி ஒன்றுக்கொன்று விரோதமானவற்றை உள்ளடக்கிக் காட்டும் ஸாமர்த்யத்தை இந்த திருவிண்ணகரை மங்களாசாஸனம் செய்து ஆச்சர்யப்படுகிறார்.

நல்குரவும் செல்வமும் என்று தொடங்கி நரகம் சுவர்க்கமும் பகையும் நட்பும் விடமும் அமுதமும் என்று முதல் பாசுரத்தில் தொடங்கி நிழல் வெயில் சிறுமை பெருமை குறுமை நெடுமை சுழல்வன நிற்பன என்று பத்தாம் பாட்டு வரை ஒன்றுக்கொன்று விரோதங்கள் நிறைந்த பகவத் விபூதியைக் காட்டுகிறார்.

நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்
பல்வகையும் பரந்த பெருமான் என்னையாள்வானை
செல்வமல்கு குடித்திருவிண்ணகர்க்கண்டேனே

(திருவாய்மொழி (6.3.1)

கண்ட இன்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய்
தண்டமும் தண்மையும் தழலும் நிழலுமாய்
கண்டுகோடற்கரிய பெருமான் என்னையாள்வானூர்
தெண்திரைப் புனல் சூழ் திருவிண்ணகர் நன்னகரே

(திருவாய்மொழி 6.3.2)

ஆழ்வார் திருவிண்ணகரை நன்னகர் என்று கூறுவதால் அந்தப் பெயரையே நாயனார் கையாள்கிறார். பல்வகையும் பரந்த என்ற முதற் பாசுர அடியை கருத்தில் கொண்டு விஸ்தீர்ணம் என்கிறார்.

**தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) (6.5)**

*ஸூ 168* கடித கடக விகடனாபாந்தவம் அவ்வூரிலே த்விகுணம்

கடகர் வழி காட்டுபவர்
கடிதர் வழிகாட்டப்பட்டவர்
விகடனை விரித்தல்

குழையும் வான்முகத்தேழையைத்
தொலைவில்லிமங்கலம் கொண்டுபுக்கு
இழைகொள் சோதிச் செந்தாமரைக் கண்பிரான்
இருந்தமை காட்டனீர்.
மழை பெய்தாலொக்கும் கண்ணநீரினொடு
அன்று தொட்டும்மையாந்து இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர் தொழும் அத்திசை உற்று
நோக்கியே

*(திருவாய்மொழி 6.5.4)*

*இவளை நீங்கள் தொலைவில்லிமங்கலம் அழைத்துச் சென்று அந்த எம்பெருமானை இவளுக்குக் காட்டினீர். அன்று முதல் இவள் கண்களில் நீர் பெருக அங்கேயே போக வேண்டும் என்று அந்த திசையை நோக்கி கைதொழுகிறாள். ஆகையால் இனி இவளிடம் உள்ள ஆசையை விட்டு விடுங்கள் என்று தோழி சொல்வதாக அமைந்துள்ளது இந்தப் பதிகம். பெண்ணை தொலைவில்லி மங்கலம் கொண்டு காட்டியதால் கடகரான நீங்கள் இனி இவளை உங்கள் மகளாக நினைத்து பயனில்லை. வழி காட்டப்பட்ட இவளுக்கும் வழிகாட்டிய உங்களுக்கும் இனி சேர்த்தியில்லை என்று பிரிக்கிறாள்.*

துவளில் மாமணி மாடமோங்கு தொலைவில்லிமங்கலம்
தொழும்
இவளை நீர் இனி அன்னைமீர் உமக்காசையில்லை விடுமினோ
தவளவொன்சங்கு சக்கரமென்றும் தாமரைத் தடங்காணன்றும்
குவளையொண்மலர்க்கண்கள் நீர் மல்க நின்று நின்று
குமுறுமே

*(திருவாய்மொழி 6.5.1)*

**பாந்தவம்**

*அந்த எம்பெருமானையே தாய் தந்தையாக ஸர்வ வித பந்துவாக இவள் கருதுகிறாள்.*

சிந்தையாலும் சொல்லாலும் செய்கை யினாலும்
தேவபிரானையே
தந்தை தாயென்றடைந்த வண்குருகூரவர் சடகோபன்

முந்தையாயிரத்துள் இவை தொலைவில்லிமங்கலத்தைச் சொன்ன
செந்தமிழ் பத்தும் வல்லார் அடிமை செய்வார் திருமாலுக்கே

*(திருவாய்மொழி 6.5.11)*

**அவ்வூரிலே**

இரங்கிநாள்தொறும் வாய்வெரீ இவள் கண்ணநீர்களலமர
மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ என்று கூவுமால்
துரங்கம் வாய் பிளந்தானுறை தொலைவில்லி மங்கலமென்று தன்
கரங்கள் கூப்பித் தொழும் அவ்வூர்த்திருநாமம் கேட்டதற் பின்னையே

(திருவாய்மொழி 6.5.5)

*இவ்வாறு அவ்வூரென்று சொல்லப்பட்ட திவ்ய தேசத்திலே தேவபிரானும் அரவிந்த லோசனனுமாய் ஸேவை ஸாதிக்கும் இரட்டைத் திருப்பதியாகையாலே த்விகுணம் என்று ஸூத்ரத்தில் பதம் உபயோகப்படுத்துகிறார் நாயனார்.*

**திருக்கோளூர் (6.7)**

ஸூ 169 கைம்முதலிழந்தாருண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகுமூரிலே ஸம்ருத்தம்.

*முந்தின திருவாய்மொழியில் (6.6) ஆழ்வார் தம்முடைய சங்கு மாமைநிறம் பீடு பண்பு கற்பு மெய் மாண்பு கட்டு என்று ஸர்வத்தையும் எம்பெருமானிடம் இழந்ததாகச் சொல்லுகையால் கைம்முதலிழந்தார் (அகிஞ்சனர்) என்று ஆழ்வாரைச் சொல்லுகிறார். எல்லாவற்றையும் இழந்தவர் என்ன உண்ணுவார் என்ற சங்கையில்*

உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர் மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்கவனூர் வினவி
திண்ணம் இளமான் புகுமூர்திருக்கோளூரே

(திருவாய்மொழி 6.7.1)

இவருக்கு தாரக போஷக போக்யங்கள் எல்லாம் கண்ணனே என்று தாய் சொல்லுவதாக அமைந்த பதிகம். பராங்குச நாயகி செல்லும் திருக்கோளூரை புதுகுமூர் என்று பாசுரம் சொல்லுவதால் புகுமூர் என்று ஸூத்ரம் அமைந்திருக்கிறது.

இந்த எம்பெருமான் ஆச்ரிதர்களை ரக்ஷிக்கிறதாகிற ஆபத்ஸகத்வம் குணமாக இருப்பதால் இவருக்கு வைத்த மாநிதி என்று திருநாமம்.

வைத்தமாநிதியை மதுசூதனையேயலற்றி
கொத்தலர்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் சொன்ன
பத்துநூற்றுள் இப்பத்து அவன் சேர்திருக்கோளூர்க்கே
சித்தம் வைத்துரைப்பார் திகழ்பொன்னுலகாள்வரே

(திருவாய்மொழி 6.7.11)

எம்பெருமானை அடைவதில் ருசிபிறந்தவர் செல்வம் நிறைந்த புகுமூரில் என்பதால் ஸம்ருத்தம் என்று சொல்கிறார்.

மல்குநீர்க்கண்ணொடு மையலுற்ற மனத்தனளாய்
அல்லுநன்பகலும் நெடுமாலென்றழைத்து இனிப்போய்
செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே
ஒல்கியொல்கி நடந்து எங்ஙனே புகுங்கொல் ஒசிந்தே

(திருவாய்மொழி 6.7.7)

**தென் திருப்பேரை 7.3**

*ஸூ 170*

சென்று சேர்வார்க்கு உசாத்துணையறுக்கும் ஸௌந்தர்யம்
மாநகரிலே கோஷிக்கும்.
கண்டதுவே கொண்டு எல்லாரும் கூடி
கார்க்கடல் வண்ணனோடு அவன்திறத்துக்
கொண்டு அலர்தூற்றிற்றது முதலாக்
கொண்ட என் காதல் உரைக்கில் தோழி

மண்திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்
விசும்பும் சுழியப்பெரிதால்
தெண்திரைசூழ்ந்து அவன் வீற்றிருந்த
தென்திருப்பேரையில் சேர்வன் சென்றே

(திருவாய்மொழி 7.3.8)

பகவதனுபவம் வேணுமென்ற ஆவல் மிகுதியால் தென்திருப் பேரையில் சென்று சேர்வன் என்று சொல்லும்படியான ஆழ்வாருக்கு பெருமாளுடைய ஸௌந்தர்யம் நெஞ்சை அபகரிக்கும்படி இருப்பதையும் பகவதனுபவத்திற்கு துணை தேட்டமாயிருக்க இவருடைய இணைபிரியாத உசாத்துணையான மனதும் எம்பெருமானிடம் போய்விட்டது. அதனால் தனக்குத் துணையில்லை என்கிறார்.

செங்கனிவாயின் திறத்ததாயும்
செஞ்சுடர் நீள்முடி தாழ்ந்ததாயும்
சங்கொடு சக்கரம் கண்டுகந்தும்
தாமரைக் கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும்,
திங்களும் நாளும் விழாவறாத
தென் திருப்பேரையில்வீற்றிருந்த
நங்கள் பிரானுக்கு என் நெஞ்சம் தோழி
நாணும் நிறையும் இழந்ததுவே

(திருவாய்மொழி 7.3.3)

பேரெயில் சூழ்கடல் தென்னிலங்கை
செற்றபிரான் வந்து வீற்றிருந்த
பேரையிற்கேபுக்கு என் நெஞ்சம் நாடிப்
பேர்த்து வரவெங்கும் காணமாட்டேன்
ஆரை இனி இங்குடையம் தோழி
என்நெஞ்சம் கூவவல்லாருமில்லை
ஆரை இனிக்கொண்டு என் சாதிக்கின்றது
என்நெஞ்சம் கண்டதுவே கண்டேனே

(திருவாய்மொழி 7.3.7)

இழந்த என் மாமைதிறந்துப்போன
என் நெஞ்சினாரும் அஙகேயொழிந்தார்
உழந்து இனியாரைக் கொண்டு என் உசாகோ
ஓதக்கடலொலிபோல எங்கும்
எழுந்த நல்வேதத்தொலி நின்றோங்கு
தென்திருப்பேரையில் வீற்றிருந்த
முழங்கு சங்கக்கையன் மாயத்தாழ்ந்தேன்
அன்னையர்காள் என்னைஎன்முனிந்தே

(திருவாய்மொழி 7.3.4)

*வேதத்தொலி நின்றோங்கு என்பதால் ஸாமகான கோஷம் அங்கு கேட்பதால் கோஷிக்கும் என்ற பதம் அமைந்திருக்கிறது. இந்த ஊரை மாநகர் என்று ஆழ்வார் சொல்லுகிறார்.*

சேர்வன்சென்று என்னுடைத்தோழிமீர்காள்
அன்னையர்காள் என்னைத் தேற்ற வேண்டா
நீர்களுரைக்கின்றது என் இதற்கு
நெஞ்சும் நிறைவும் எனக்கிங்கில்லை
கார்வண்ணன் கார்க்கடல் ஞாலமுண்ட
கண்ணபிரான் வந்து வீற்றிருந்த
ஏர்வளவொண்கழனிப்பழனத்
தென்திருப்பேரெயில்மாநகரே

(திருவாய்எமாழி 7.3.9)

**திருவாறன்விளை (7.10)**

ஸ ூ 7

ப்ரவணசித்தம் பரத்வ விமுகமாக்கும் ஆனந்தவ்ருத்தி
நீணகரிலே

*திருவாறன்விளை எம்பெருமானிடம் ஆழங்கால்பட்ட ஆழ்வாருக்கு வைகுண்டம் திருவாறன்விளை இரண்டில் ஒன்று கிடைப்பதானால் திருவாறன்விளையே ப்ராப்யமென்னும்படி யாயிற்று.*

தீவினை உள்ளத்தின் சார்வல்லவாகித்தெளிவிசும்பேற
லுற்றால்
நாவினுள்ளும் உள்ளத்துள்ளும் அமைந்த தொழிலினுள்ளும்
நவின்று
யாவரும் வந்து வணங்கும் பொழில் திருவாறன் விளையதனை
மேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொல் என்னும்
என்சிந்தனையே

(திருவாய்எமாழி 7.10.0)

*பரமபதத்திலுள்ளாரும் வந்து ஆச்ரயிக்கும் திருவாறன்விளையே எனக்கு ப்ராப்யம் என்று பரத்வமும் உத்தேச்யமில்லை என்னும் படியான நிலை ஆழ்வாருக்கு ஏற்பட்டது. என் சிந்தை மற்றொரு விஷயத்தில செல்லாது என்று எம்பெருமான் அறிவார். நித்யஸூரிகளைப் போலவே முமுக்ஷுக்களும் வந்து ஆச்ரயிக்கும் படியான தேசம்.*

சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத்தன்மை தேவ
பிரானறியும்
சிந்தையினால் செய்வதானறியாதன மாயங்களொன்றுமில்லை
சிந்தையினால் சொல்லினால் செய்கையினால் நிலத்தேவர்
குழு வணங்கும்
சிந்தை மகிழ் திருவாறன்விளையுறை தீர்த்தனுகற்றபின்னே

(திருவாய்மொழி 7.10.10)

*திருவாறன்விளை எம்பெருமானுக்கே ஆனபிறகு பரமபதம் என்று பேர் சொல்லவும் விரும்பாமல் மற்றொன்று என்கிறார். இதன் ஆனந்தவ்ருத்தியை முதல் பாசுரத்திலேயே காட்டுகிறார்.*

இன்பம் பயக்க எழில்மலர் மாதரும் தானும் இவ்வேழுலகை
இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள்
பிரான்
அன்புற்றமர்ந்துறைகின்ற அணிபொழில் சூழ் திருவாறன்
விளை
அன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழும் நாள்களும்
ஆகுங்கொலோ

(திருவாய்மொழி 7.10.1)

ஒன்றுநில்லாகெடும் முற்றவும் தீவினை உன்னித்தொழுமின்
    தொண்டீர்
அன்றங்கமர்வென்று உருப்பிணிநங்கை நெடும்பணைத்
    தோள் புணர்ந்தாய்
நின்றவணிதிருவாறன்விளை என்னும் நீணகரமதுவே

(திருவாய்மொழி 7.10.6)

*என்ற பாசுரத்தின்படி நீணகரத்திலே என்று ஸூத்ரத்தை முடிக்கிறார்.*

**திருக்குளந்தை (8.2)**

**ஸூ 172**

ஸாதரரைப்பரிசழிக்கும் சேஷ்டிதாச்சர்யம்குளத்தே கொடி
    விடும்
கூடச்சென்றேன் இனியென்கொடுக்கேன்
கோல்வளை நெஞ்சத்தொடக்கமெல்லாம்
பாடற்றொழிய இழந்துவைகல்
பல்வளையார் முன் பரிசழிந்தேன்
மாடக்கொடிமதிள் தென்குளத்தை
வண்குடபால்நின்ற மாயக்கூத்தன்
ஆடற்பறவையுயர்த்தவெல்போர்
ஆழிவலவனை ஆதரித்தே

(திருவாய்எமாழி 8.2.4)

*பெரியதிருவடியால் வஹிக்கபடும் வலக்கையில் சக்கரமேந்திய மாயக்கூத்தனை ஆச்ரயித்து சென்றேன். என்லஜ்ஜையையும் இழந்தேன் (பரிசழிந்தேன்) என்று தன்பால் ஆதரத்தோடே இருப்பாரை ஸ்த்ரீத்வத்துக்குரியதான லஜ்ஜையை அழிக்கும் மாயக்கூத்தன் என்பதால் அவன் சேஷ்டிதாச்சர்யத்தைச் சொல்லி அது மாடக்கொடிமதில் தென்குளந்தையிலே மாட மாளிகை மதில்களில் கட்டின கொடிபோல் பிரகாசிக்கும்.*

திருவண்பரிகாரம்

ஸூ 173

ச்ரமமனம் சூழும் ஸௌகுமார்யப்ரகாசம் ஆய்ச்சேரியிலே.

இந்த திவ்யதேசம் ஆழ்வாருடைய திருத்தாயாரின் ஊராகையாலே ஆய்ச்சேரி என்று சொல்லுகிறார். பரம பதத்தில் நித்ய ஸூரிகள் கைங்கர்யம் செய்ய, அமர்ந்திருக்கும் எம்பெருமான் தன் ஸௌகுமார்யமான திருமேனியுடன் இங்கு அவதரித்து அடியார் களுடைய துக்கங்களைப் போக்குவது மூவுலகங்களையும் அளப்பது ஆகிய காரியங்களால் வந்த சிரமத்தை நினைத்து அவருடைய ஸௌகுமார்யத்தை வெளிப்படுத்துகிறார்.

கொடியார்மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்னே நீஒயில்மேவி மகிழ்ந்ததுதான்
அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ அன்றேல் இப்
படிதான் நீண்டுதாவிய அசைவோ பணியாயே
பணியாவமரர் பணிவும் பண்பும் தாமேயாம்
அணியாராழியும் சங்கமும் ஏந்துமவர் காண்மின்
தணியாவெந்நோய் உலகில் தவிர்ப்பான் திருநீல
மணியார்மேனியோடு என்மனம் சூழவருவாரே
வருவார் செல்வார் வண்பரிசாரத்திருந்த என்
திருவாழ்மார்வர்க்கு என்திறம் சொல்லார்செய்வதென்
உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு
ஒருபாடுழல்வான் ஓரடியானுளனென்றே

(திருவாய்மொழி 8.3.5 6 7)

திருச்செங்கன்னூர் திருச்சிற்றாறு (8.4)

ஸூ 174

மஹாமதிகள் அச்சங்கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்றாற்றிலேகொழிக்கும்.

திருதாஷ்டிரன் ஸபையில் பாண்டவர்க்காகத் தூதுமொழிந்து பின்னர் விதுரரின் இருப்பிடத்திற்கு வருகிறான். ஸபையில் கண்ணன் ஆஸனம் உடைந்ததை மனதில் கொண்டு தன் இல்லத்தில் கண்ணன் உட்காருவதற்கு முன் ஆஸனத்தைத் தொட்டு பரிட்சை செய்கிறான் விதுரன். இந்த வ்ருத்தாந்தத்தை மஹா பாரதத்தில் अस्पृशन्तसनं शौरेः विदुरस्स महामतिः என்று சொல்லப் பட்டிருக்கிறது.

திருச்சிற்றாற்றில் வாஸம் செய்யும் விதுரரைஒத்த மகாமதிகள் பயப்படத்தேவையில்லாதபடி பெருமான் சௌர்யத்தை ஒரே பாசுரத்தில் காட்டுகிறார் ஆழ்வார். ஆதி என்ற சொல்லால் வீர பராக்ரமங்கள் சொல்லப்படுகின்றன.

குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்று பாகனையும் மல்லர்களையும் அழித்து ஸபையில் இருக்கும் மற்ற அரசர்கள் பார்ததுக் கொண்டிருக்கும்போதே கம்ஸனைப் பிடித்திழுத்து ஸம்ஹாரம் செய்த கண்ணனே திருச்சிற்றாற்றில் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறான்.

வார்கடாவருவியானை மாமலையின்
மருப்பிணைக்குவடிறுத்துருட்டி
ஊர்கொள்திண்பாகன் உயிர்செகுத்து
அரங்கின் மல்லரைக் கொன்று சூழ்பரண்மேல்
போர்கொட அரசர் புறக்கிட
மாடமீமிசை கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள் சிற்றாயன் திருச்செங்கன்னூரில்
திருச்சிற்றாறு எங்க்ள செல் சார்வே

(திருவாய்மொழி 8.4.1)

ஆற்றில் அடித்து வரும் மணி முத்து முதலியவை கொழித்து கரையிலே தோற்றுவதைக்கருதி கொழிக்கும் என்ற பதம் உபயோகிக்கிறார்.

**திருக்கடித்தானம் (8.6)**

**ஸூ.175**

ஸாத்யஹ்ருதிஸ்தனாயும் ஸாதனமொருக்கடுக்கும்
க்ருதஜ்ஞதா கந்தம் தாய்ப்பதியிலே

*ஆழ்வாருக்கு ஸாத்யம் எம்பெருமான். எம்பெருமானுக்கு ஸாத்யம் ஆழ்வார். முந்திய திருவாய்மொழியில் அவதாரத்திற்குப் பிற்பட்டவராய் அந்தர்யாமி கண்ணுக்கு விஷயமில்லாதிருக்க உன்னை எங்கே காண்பது என்றும் ஆழ்வார் யோசிக்கிறார். இப்பொழுது ஆழ்வாருக்கு அவர் அபேக்ஷிதத்தை நிறைவேற்ற திருக்கடித்தானத்தில் வந்து ஸந்நிஹிதனாய் ஆழ்வார் ஹ்ருதயத்திலும் வாஸம் செய்யலானான். ஸாத்யம் கைப்பட்ட பின்பு 'ஸாதனத்தில் யார் ப்ரவேசிப்பார்கள் என்று ஆழ்வார் ஹ்ருதயத்திலும் ஸாதனமான திருக்கடித்தானத்திலும் ஒரே ஸமயத்தில் ஸந்நிஹிதனானான்.*

திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும்
ஒருக்கடுத்து உள்ளே உறையும் பிரான் கண்டீர்
செருக்கடுத்து அன்று திகைத்த அரக்கரை
உருக்கெட வாளி பொழிந்த ஒருவனே

(திருவாய்மொழி 8.6.2)

*இப்படி எம்பெருமான் ஆழ்வார் உள்ளத்தில இருந்தபோதும் இதை நாம் பெற்றது அவன் திருக்கடித்தானத்தில் நிலையாக இருப்பதாலன்றோ என்று உண்டான க்ருதத்ஞதா பரிமளம் ஆக இந்த திவ்ய தேசத்தை தன் பிதுரார்ஜிதமாக தாயபாகமாக ஆழ்வார் எண்ணுகிறார்.*

தானநகர்கள் தலை சிறந்தெங்கெங்கும்
வானின்னிலம் கடல் முற்றும் எம்மாயற்கே
ஆனவிடத்தும் என் நெஞ்சும் திருக்கடித்
தானநகரும் தனதாயப்பதியே

(திருவாய்மொழி 8.6.8)

கடித்தாளம் என்று மணத்தையுடைய ஸ்தானமாகையாலே கந்தம் என்று சொல்கிறார்.

**குட்டநாட்டுத்திருப்புலியூர் (8.9)**

**ஸூ 176**

அவகாஹித்தாரை அநந்யார்ஹமாக்கும் நாயகலக்ஷணம் வளம் புகழுமூரிலே குட்டமிடும்

தன் திருவருளில் மூழ்கினவர்களை தன்னைத் தவிர வேறு ஒருவருக்கும் உரியவராகாமல் தனக்கே உரியவராக ஆக்கும் நாயகலக்ஷணம் குட்டுநாட்டுத் திருப்புலியூரிலே எழுந்தருளி யிருக்கும் எம்பிரானுக்கு உள்ளது என்கிறார்.

புனையிழைகளணிவும் ஆடையுடையும் புதுக்கணிப்பும்
நினையும் நீர்மையதன்று இவட்கு இது நின்று நினைக்கப்புக்கால்
சுனையினுள் தடந்தாமரைமலரும் தண் திருப்புலியூர்
முனைவன் மூவுலகாளி அப்பன் திருவருள்மூழ்கினளே

(திருவாய்மொழி 8.9.5)

திருத்தாயாரும் பெரியோர்களும் ஆழ்வார் நாயகிக்கு திருமணம் பேச முயற்சிக்க தோழி இது ஸரியல்ல இவளுக்கு குட்ட நாட்டுத்திருப்புலியூரெம்பெருமானோடு ஸம்பந்தம் ஏற்பட்டு விட்டது அவனைத் தவிர வேறு ஒருவருக்கு இவளை மணம் முடிப்பது தர்மமன்று என்று சொல்லுகிறார். மேலும் அவனுடைய ஐசுவரியத்தை பார்க்கிலும் அவனுக்கு இணையில்லை என்கிறாள். மூழ்கினள் என்பதை அவகாஹித்தார் என்று சொல்லுகிறார். அவனுடைய அவயவ சோபையாலும் இவளை அநந்யார்ஹ மாக்கினான் என்று சொல்கிறார்.

கருமாணிக்கமலைமேல் மணித்தடம் தாமரைக் காடுகள் போல்
திருமார்புகண் கைகால் உந்திகாலுடையாடைகள் செய்யபிரான்

திருமாலெம்மான் செழுநீர்வயல் குட்டநாட்டுத்திருப்புலியூர்
அருமாயன்பேரன்றிபேச்சிலள் அன்னைமீர் இதற்கென்
செய்கேனோ

(திருவாய்மொழி 8.9.1)

*இந்த ஊரின் வளத்தை ஆழ்வார் புகழ்வது கருதி வளம்புகழுமூர் என்கிறார்.*

அன்னைமீர் இதற்கென் செய்கேன் அணிமேருவின் மீதுலவும்
துன்னுசூழ்சுடர் ஞாயிறு அன்றியும் பல்சுடர்களும்போல்
மின்னு நீள்முடியாரம் பல்கலன் தானுடையெம்பெருமான்
புன்னையம் பொழில் சூழ் திருப்புலியூர் புகழுமிவனே

(திருவாய்மொழி 8.9.2)

*திவ்யதேசத்தின் பெயரை ஒட்டி குட்டமிடும் என்கிறார்.*

திருப்பளிங்குடி வரகுணமங்கை ஸ்ரீவைகுண்டம் (9.2)

ஸூ 177 போக்யபாகத்வரைதெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்

*அனுபவமிக்க மிகவிரும்பப்படும் வஸ்துதயாராவதற்கு முன் பதற்றத்தாலே அதற்கு அருகில் வந்து நிற்பது இருப்பது கிடப்பதுமாயிருக்கும் நிலைபோலே எம்பெருமானுக்கு மிகவும் போக்யரான ஆழ்வாருக்கு பரமபக்தி பக்குவமாவதற்குமுன் அவனுக்கு உண்டான த்வரை அவசரம் இந்த மூன்று திவ்யதேசங்களிலும் அவன் எழுந்தருளியிருக்கும் நிலையைக் குறித்து ஆழ்வார் சொல்லுகிறார்.*

புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து
வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தையகங்கழியாதே
என்னையாள்வாய் எனக்கருளி
நளிர்ந்த சீருலகமூன்றுடன் வியப்ப
நாங்கள் கூத்தாடி நின்றார்ப்ப

பளிங்குநீர்முகிலின் பவளம் போல
கனிவாய்சிவப்ப நீகாணவாராயே

(திருவாய்மொழி 9.2.4)

திருப்புளிங்குடியில் எம்பெருமான் சயனத்திருக்கோலத்திலும் வரகுணமங்கையில் வீற்றிருந்தும் ஸ்ரீவைகுண்டத்தில் நின்ற கோலத்திலும் ஸேவை ஸாதிக்கிறார்.

பாசுரத்தின் இரண்டாவது அடியில் தெளிந்த என்று தொடங்குவதால் அதற்கு முந்திய முதலடியில் போக்யபாகத்தவரை இந்த மூன்று திவ்யதேசங்களிலும் தெரியுமென்கிறார்.

இநதப்பதிகம் முழுவதும் திருப்புளிங்குடிக்காயிருந்தபோதும் இந்தப் பாசுரத்தில் மற்றையிரண்டு திவ்யதேசங்களையும் ஆழ்வார் காட்டுகிறார்.

**திருக்காட்கரை (9.6)**

**ஸூ 178**

போகத்தில் தடம் மாறும் சீலம் காட்கரையிலே கரையழிக்கும்

இப்படி போக்யரான ஆழ்வாருடன் கலந்து பரிமாறும்போது சேஷசேஷிபாவம் மாறாடிப்பரிமாறும் சீலகுணம் திருக்காட்கரையிலே கரையைக் கடந்து பெருகும். க்ரையழிக்கும் என்றது காட்கரை என்ற பெயரைக் கடாக்ஷித்துக் கூறுகிறார்.

காட்கரையேத்தும் அதனுள் கண்ணா என்னும்
வேட்கைநோய் கூர நினைந்து கரைந்துகும்
ஆட்கொள்வானொத்து என்னுயிருண்டமாயனால்
கோட்குறைபட்டது என்னாருயிர் கோளுண்டே

(திருவாய்மொழி 9.6.7)

வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம்

பாரித்து தானென்னை முற்றப்பருகினாள்
காரொக்கும் காட்கரையப்பன் கடியனே

(திருவாய்மொழி 9.6.10)

தம்மோடு கலந்த எம்பெருமானுக்குத் தன்னைக் காட்டிலும் ஆர்வம் மிகுந்திருந்தபடியைச் சொல்லுகிறார். நானே எல்லாக் கைங்கரியமும் செய்ய வேணுமென்று வந்த என்னை ஸ்வதந்த்ரனாய் விபுவான அவன் அணுபரிமாணமாய் சேஷமான என்னை தன் குணம் சேஷ்டிதம் இவற்றைக் காட்டி என்னை நீராக்கி பருகினான் என்னுமிடத்தில் விபீஷணன் சரணாகதி பண்ணின போது ஸுக்ரீவனிடம் आनयैनं हरिश्रेष्ठ வானரத்தலைவனே அவனை அழைத்துவா என்று சொல்லி விபீஷணன் அருகில் வந்ததும் वचसा सात्त्वयित्वैनं लोचनाभ्यां पिबन्निव தன்வார்த்தைகளால் அவனுக்கு ஆறுதல் சொல்லி தன் கண்களால் அவனைப் பருகுவது போல் பார்த்தார். என்பது கவனிக்கத்தக்கது.

**திருமூழிக்களம் (9.7)**

**ஸூ.179**

மஹாத்மாக்கள் விரஹம் ஸஹியாதமார்த்தவம் வளத்தின் களத்தே கூடு பூரிக்கும்

ஆழ்வாருடைய தூதுப் பதிகங்கள் நான்கில் இது நான்காவது. அந்த நோக்கில் இந்தப் பதிகத்தை விளக்கும் நாயனார் தமரோட்டை வாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தை உணர்த்தும் அர்ச்சை தூதுக்கு விஷயம் என்கிறார்.

நுமரோடும் பிரியாதே நீரும் நும் சேவலுமாய்
அமர்காதல்குருகினங்காள் அணிமூழிக்களத்துறையும்
எமராலும் பழிப்புண்டு இங்கு என்தமராலிழிப்புண்டு
தமரோடங்குகுறைவார்க்குத்தக்கிலமே கேளீரே

(திருவாய்மொழி 9.7.7)

இந்த திவ்ய தேசத்தில் இருக்கும் பெருமக்களை விட்டுப் பிரிய மனமில்லாததால் என்னைக் கொள்ள அவன் வரவில்லை என்று

எண்ணுகிறேன். எமக்கும் உமது அனுபவம் கிட்ட வேண்டாமோ அடியார்கள் குழாங்களோடு ஒன்று கூடுவது என்றுகொலோ. அவர்கள் பிரிவை சிறிதும் தாங்கமுடியாத ம்ருதுத்தன்மையோ உள்ளது. என்று கேட்கிறார். அந்த மகாத்மாக்களோடு என்னையும் சேர்த்து இருக்கும்படியாக நோக்க மாட்டீரோ என்று கேளுங்கள் என்று குருகினங்களைத்தூது விடுகிறார். இங்கு ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்தி

सकृत्वदाकारविश्लोकनाशया तृणीकृतानुत्तम भुक्तिमुक्तिभिः ॥
महात्मभिर्मामवलोक्यतां नय क्षणेपि ते यद्विरहोतिदुस्सहः (स्तोत्ररत्नम्)

எந்த பெரியோர்களின் பிரிவானது உனக்கு ஒரு க்ஷணமும் மிக பொறுக்கமுடியாததாக இருக்கிறதோ ஒரு தடவை உன்னுடைய திருமேனியைக்காண வேணும் என்று ஆசையினால் மேலான போகங்களையும் துரும்பு போல் கருதும் அந்தப் பெரியவர்களால் கடாக்ஷிக்கத்தக்கவனாயிருக்கும் தன்மையை நான் அடையும்படி செய்வாயாக.

இத்தகைய மஹாத்மாக்களை விட்டுப்பிரிய முடியாமல் திருமூழிக்களத்திலிருக்கும் எம்பெருமானின் மார்த்தவத்தை இங்கு அனுபவிக்கிறார்.

களத்தில் அறுத்த நெல்லைக் கூடுகட்டி வைப்பதுபோல் கூடு பூரிக்குமென்கிறார்.

**திருநாவாய் (9.8)**

ஸூத் 180 பிரிந்த துன்பக்கடல் கடத்தும் விஷ்ணுபோதா ந்ருஸூமஸ்யம் நாவாயிலே நிழலெழும்

கீழில்திருவாய்மொழியில் தம் பிரிவின் துக்கத்தைப் பலபடியாகச் சொல்லி மேன்மேலும் தூதனுப்பியவரின் துக்கத்தைக் கடப்பதற்கு எம்பெருமானுடைய கருணையே தகுந்த ஓடம் என்று இத்திவ்ய தேசத்தின் பெயரிலுள்ள ஓடம் என்று பொருளுடைய நாவாயைகருத்தில் கொண்டு விஷ்ணுபோதம் என்று சொல்லுகிறார்.

विष्णुपोतं विना नान्यत् किञ्चिदस्ति परायणम्

ஶ்லோகத்தில் சொல்லுகிறபடி விஷ்ணுவாகிற ஓடத்தைக் தவிர மேலானது வேறு ஒன்றுமில்லை. இந்த இடத்தில் கருணை என்பதற்கும் ஆந்ருஶம்ஸ்யம் என்பதற்கும் உள்ள ஸூக்ஷ்மமான வித்தியாஸத்தை ஸீதையைப் பிரிந்த இராமனைக்குறித்து

स्त्री प्रनष्टेति कारुण्यं आश्रितेत्यानृशंसता

என்று சொல்கிறார். மனைவி அபகரிக்கப்பட்டாள் என்று கருணையும் தன்னை அண்டினவளைக் குறித்து ஆந்ருஶம்ஸ்யம் என்றும் கூறுகிறார்.

இந்த திவ்ய தேசத்தில் நித்ய வாஸம் பண்ணுபவனுடைய ஸ்வபாவம் இதுதானோ என்று எண்ணும்படி இருப்பதால் இந்த ஊருக்கு திருநாவாய் என்று பெயர் வந்ததென்று ஸந்தேகப்படும்படி யிருக்கிறது.

**திருக்கண்ணபுரம் (9.10)**

ஸூத் 181

சரண்யமுகுந்தத்வம் உத்பலாவதகத்திலே ப்ரஸித்தம்

பலம் என்றதுக்கு மாம்ஸம் என்று பொருள். தேகத்தை வாட்டி உடலில் தசையே யில்லாமல் மோக்ஷத்தையே விரும்பியிருக்கும் ரிஷிகளை உத்பலர் என்று சொல்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு ரக்ஷகனாக சௌரிப்பெருமாள் இருப்பதால் திருக்கண்ணபுரத்தில் பெருமாள் ஸந்நிதி விமானத்திற்கு உத்பலாவதகம் என்று பெயர் உண்டாயிற்று. பெருமாளுடைய மோக்ஷப்ரதத்வத்தை ஆழ்வார் வெளியிடுகிறார். சரணமடைந்தவர்கள் தேகம் கழிந்துபோனால் மோக்ஷம் கொடுப்பதாக எம்பெருமான் நாளிட்டு கொடுக்கிறார்.

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்
அரணமைந்த மதிள்சூழ்திருக்கண்ணபுரத்
தரணியாளன் தனதன்பர்க்கன்பாகுமே

*(திருவாய்மொழி 9.10.5)*

**திருமோகூர் (10.1)**

ஸூ 182 மார்க்கபந்துசைத்யம் மோஹனத்தேமடுவிடும்

*சரீரத்தின் பிரிவில் மோக்ஷம் என்று திருக்கண்ணபுரத்தில் அறிந்த பிறகு அர்ச்சிராதி கதியில் செல்வதற்கு வழித்துணைதேடி திருமோகூர் எம்பெருமானை வழித்துணையாக்கிக் கொள்கிறார் ஆழ்வார்.*

தாளதாமரை தடமணிவயல் திருமோகூர்
நாளும் மேவிநன்கமர்ந்து நின்று அசுரரைத்தகர்க்கும்
தோளும்நான்குடைச்சுரிகுழல் கமலக்கண் கனிவாய்
காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதியே

(திருவாய்மொழி 10.1.7)

*ஸாம்ஸாரிகமான எல்லா தாபங்களையும் போக்கும் சைத்யம் (குளிர்த்தி) அவனுடைய நிழலடியில் கிட்டும் என்கிறார்.*

இலங்கதிமற்றொன்றெம்மைக்கும் ஈன்தண்துழாயின்
அலங்கலங்கண்ணி ஆயிரம் பேருடையம்மாள்
நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ்திருமோகூர்
நலங்கழலவனடிநிழல்தடமன்றியாமே

(திருவாய்மொழி 10.1.2)

*அம்ருதத்தை தேவர்களுக்கு அளிக்கும்போது அசுரர்களை மோகமடையச் செய்த இடமாகச் சொல்லப்படுவதால் மோஹனம் என்று குறிக்கிறார்.*

துயர்கெடும் கடிதடைந்து வந்து அடியவர்தொழுமின்
உயர்கொள் சோலை நண்தடமணியோளிதிருமோகூர்
பெயர்களாயிரமுடைய வல்லரக்கர் புக்கழுந்த
தயரதன் பெற்ற மரகத மணித்தடத்தினையே

(திருவாய்மொழி 10.1.8)

*மரகதமணித்தடம் என்று குளிர்த்தியளிக்கும் நீர் நிலையைச் சொல்வதால் மடுவிடும் என்று ப்ரயோகம்.*

**திருவனந்தபுரம் (10.2)**

ஸூ 183 ஸஸைன்ய புத்ர சிஷ்ய ஸாத்யஸித்த ஸுூரார்ச் சனத்துக்கு முகநாபி பாதங்களை த்வாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்த சயனத்திலே வ்யக்தம்.

அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதிசேர் ஆனந்தபுரத்து
அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப்பணிசெய்வர் விண்ணோர்
நமர்களோ சொல்லக் கேண்மின் நாமும் போய் நணுக வேண்டும்
குமரனார்தாதைதுன்பம் துடைத்த கோவிந்தனாரே

(திருவாய்மொழி 10.2.6)

*அமரர்கோனர்ச்சிக்கின்ற என்கையாலே நித்ய ஸூரிகளுக்குத் தலைவரான ஸேனை முதலியார் போன்ற ஸாத்யர்களும் அமரராய்த் திரிகின்றார் என்கையாலே புத்ரர்களான ப்ரம்மாதி தேவர்களான ஸித்தர்களுடையவும் நமர்களோ சொல்லக்கேண்மின் என்கையால் ஆழ்வாருடைய உபதேசம் கேட்ட அந்தணர்களுடையவும் அர்ச்சனத்திற்கு முகம் நாபி திருவடி மூன்றையும் மூன்று வாயில்களாலே நித்ய ஸூரிகள் ப்ரம்மாதி தேவர்கள் ஸம்ஸாரிகள் என்று பேதம் பாராமல் ஸமமாக இருப்பதால் ஸாம்யகுணம் இங்கு தெளிவாகத் தெரிகிறது.*

**திருவாட்டாறு (10.3)**

ஸூ 184 மோக்ஷதானத்தில் ப்ரணதபாரதந்த்ர்யம் வளம் மிக்க நதியிலே கரை புரளும்.

*ஆச்ரிதர்களுக்கு மோக்ஷ ப்ரதானம் பண்ணுவதில் அவர்கள் சொன்னபடி செய்கிறதாகிற ஆச்ரிதபாரதந்த்ரயம்*

அருள்பெருவார் அடியார் தம்மடியனேற்கு ஆழியான்
அருள்தருவானமைகின்றான் அது நமது விதிவகையே
இருள்தருமாஞாலத்துள் இனிப் பிறவியான் வேண்டேன்
மருளொழி நீ மட நெஞ்சே வாட்டாற்றானடி வணங்கே

நண்ணினம் நாராயணனை நாமங்கள் பல சொல்லி
மண்ணுலகில் வளம் மிக்க வாட்டாற்றான் வந்து இன்று
விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே
எண்ணினவாறாகா இக்கருமங்கள் என்னெஞ்சே

(திருவாய்மொழி 10.6.1 3)

*வளம்மிக்க ஒன்று என்று ரக்ஷ்யவர்க்கம் நிறைந்த தேசமாகையாலே ஸம்பத்து நிறைந்திருக்கிற வாட்டாற்றில் அளவின்றி ப்ரவாஹிக்கும் என்பதை கரைபுரளும் என்கிறார்.*

*விதிவகையே என்பது ஆச்ரிதனான என் சொல்கேட்டு மோக்ஷம் தரவிரைகின்றான். தன் ஆச்ரித பாரதந்த்ர்யத்தை வெளிப்படுத்து கிறான்.*

**திருமாலிருஞ்சோலை (2.10)(10.7)**

ஸூ 185 த்யாஜ்யதேகவ்யாமோகம்மருள்கள் கடியும் மயல் பொழிலிலே தழைக்கும்

*ஆழ்வாருக்கு பரமபதப்ராப்தி மிக நெருங்கியபோது எம்பெருமான் அதிக அவசரப்பட்டு சரீரத்துடனே அவரை அழைத்துப்போக எண்ணுகிறான். இந்த சரீரம் இங்கேயே இருக்க வேண்டியது. இத்துடன் இந்த ஆத்மாவை கொண்டு செல்லமுடியாது என்று எம்பெருமானுக்கு உபதேசம் செய்கிறார்.*

அருளையீயென்னம்மானே என்னும்முக்கணம்மானும்
தெருள்கொள்பிரமனம்மானும் தேவர்கோனும் தேவரும்
இருள்கள்கடியும் முனிவரும் ஏத்துமம்மான்திருமலை
மருள்கள் கடியும் மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே

(10.7.10)

*மருள்களைப் போக்கும் திருமாலிருஞசோலையில் வந்த எம்பெருமான் விடவேண்டிய ஆழ்வாரின் தேகத்தில் வ்யாமோகத்தை காட்டினான். தன்னுடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்து என்னை அழைத்துச் செல்லவேண்டும் என்கிறார்.*

மங்கவொட்டுஉன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே யானே நீயாகி என்னையளித்தானே
பொஙகைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்கிவ்வுயிரேய்பிரகிருதி மானாங்கார மனங்களே

(திருவாய்மொழி 10.7.10)

*பஞ்சபூதங்கள் ஐந்து கருமேந்திரியம் ஐந்து ஞானேந்திரியம் ஐந்து தன்மாத்ரைகள் மஹத் அகங்காரம் மூலப்பிரகிருதி மனஸ் ஆகிய 24 அசேனதத்வங்களையும் நீக்கிவிட்டு என்னை ஆட்கொள் என்கிறார்.*

பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே
புயல் மறைவண்ணர் புரிந்துரைகோயில்
மயல்மிகுபொழில்சூழ்மாலிருஞ்சோலை
*அயல்மலையடைவது அது கருமமே*

(திருவாய்மொழி 2.10.3)

*என்று 2ம் பத்து 10ந்திருவாய்மொழியைக் கடாட்சித்து மயல் மிகு பொழில் என்று திருமாலிருஞ்சோலையைச் சொல்லுகிறார்.*

**திருப்பேர்நகர் (10.8)**

ஸூ 186 அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெருநகரிலே பேர்பெற்றது.

திருமாலிருஞ்சோலைமலையென்றேன் என்ன
திருமால் வந்து என்நெஞ்சு நிறையப்புகுந்தான்
குருமாமணி உந்துபுனல் பொன்னித்தென்பால்
திருமால்சென்று சேர்விடம் தென்திருப்பேரே
பேரேயுறைகின்றபிரான் இன்று வந்து
பேரேனென்று என் நெஞ்சு நிறையப்புகுந்தான்
காரேழ் கடலேழ் மலையேழலகுண்டும்
ஆராவயிற்றானை அடங்கப்பிடித்தேனே

(திருவாய்மொழி 10.8.1,2)

திருமாலிருஞ்சோலை என்று பெயரைச் சொன்னேன். என்னிடம் எந்த ஸுக்ருதமும் இன்றிக்கேயிருக்க என் ஊரைச் சொன்னாய் என்று

அதைக் காரணமாக்கி என்னுள் புகுந்தான். பேரேனென்று இனி இங்கிருந்து போகேன் என்று புகுந்தான். திருமாலிருஞ் சோலையும் திருப்பேர்நகரும் போலே உமது நெஞ்சும் என்ஸ்வாமித்வத்திற்குட் பட்டது என்று காட்டினாள். பெருநகர் என்றும் பேர்பெற்றது என்றும் திருப்பேர்நகர் என்று பெயரைக் கடாக்ஷித்து அருளிச் செய்கிறார்.

ஆக எம்பெருமாள் எல்லா திவ்யதேசங்களிலும் அவனுடைய எல்லா கல்யாண குணங்களுடன் இருந்தாலும் ஆழ்வாருடைய அனுபவத்தில் ஒவ்வொரு திவ்யதேசத்திலும் ஒரோர் குணம் ப்ரதானமாக பிரகாசிக்கிறது என்று நாயனார் காட்டுகிறார்.

விபவம் என்கிற அவதாரம் அந்தந்த காலங்களில் இருந்தவர்களுக்கே ஸாத்யம். இவற்றிற்கும் பிற்பட்டவர்களுக்கு எல்லா கல்யாண குணங்களும் உடைய அர்ச்சாவதாரமே ஆச்ரயிக்கத் தக்கது. இதை திருமங்கையாழ்வார் காட்டுகிறார்.

பொன்னானாய் பொழிலேழய் காவல்பூண்ட
புகழானாய் இகழ்வாய தொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்னயல்லால்
என்னறிவன் ஏழையேன் எலகமேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபாலானாய்
குணபாலமதயானாய் இமையோர்க்கு என்றும்
முன்னானாய் பின்னானார் வணங்கும் சோதி
திருமூழிக்களத்தானாய் மதலானாயே

(திருநெடுந்தாண்டகம் - 10)